# வட புலத்தில் முகநூலைப் பயன்படுத்துபவர்கள் மத்தியில் வெறுப்புப் பேச்சுக்கள்: அதிக கரிசனைக்கு ஆளாகும் விடயங்கள் தொடர்பிலான ஆய்வு

**லக்ஷிகா, க., யூட் டினேஸ் கொடுதோர், சூ.**
ஊடகக் கற்கைகள் துறைஇகலைப்பீடம்இயாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
lakshilaxlax1998@gmail.com

*இன்றைய உலகின் போக்கில் முக்கிய அங்கமாக சமூக ஊடகங்கள் மாறி உள்ள காலப் பின்னணியில் முகநூலினுடைய பாவனையும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. குறிப்பாக இன்றைய உலகின் இயங்குநிலையை தீர்மானிக்கும் சக்தியாக முகநூல் மாறி வருகின்ற சூழலில் அதனை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு அமைகிறது. தற்காலத்தில் இணையப் பாவனை அதிகரித்துச் செல்லும் நிலையில்இமுகப்புத்தகங்களைப் பொறுத்தவரை நன்மையான விடயங்கள் இருந்தாலும் கூட ஒரு தனிப்பட்ட நபரையோ அல்லது குழுவையோ பாதிக்க கூடிய வகையில் அதிகமான வெறுப்புப் பேச்சுக்கள் தோன்று வதாலும், வெறுப்புப் பேச்சு என்பது அண்மைக்காலத்தில் தோன்றிய விடயப்பரப்பு என்னும் அடிப்படையிலும் அண்மைக்காலத்தில் அதிகமாகப் பேசப்படும் முக்கியமான பேசு பொருளாக அமைகின்றது. அந்தவகையில் முகநூலில் வெளிவரும் வெறுப்புப் பேச்சுக்கள் பயனர்கள் மத்தியில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன, அவை ஏனைய சமூக ஊடகங்களோடு ஒப்பிடும்போது முகநூலில் வெறுப்புப் பேச்சுக்கள் அதிகம் இடம்பெறு கின்றனவா என்பதைக் கண்டறிவதே பிரதான நோக்கமாகும். இந்த ஆய்வு பண்புசார், எண்சார் ஆய்வுமுறையியலின் அடிப்படையில் உள்ளடக்கப் பகுப்பாய்வாக மேற்கொள்ளப் பட்டது. அவதானத்தின் அடிப்படையில் முதனிலைத்தரவுகளும் பத்திரிகைகள், இணையக் கட்டுரைகள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், அறிக்கைகள், வலைத்தளங்கள் ஆகியன இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப் பட்டன. உள்ளடக்கப் பகுப்பாய்விற்காக தரவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வின் மூலம் முடிவுகள் பெறப்பட்டன. அந்தவகையில் வடபுலத்தில் முகநூல் வழியாகப் பரப்பப்படும் வெறுப்புப் பேச்சுக்கள் குறிப்பிட்ட நோக்கத்தை அதாவது ஒருவரை இழிவு படுத்தும் இனம், மதம் சார்ந்த தவறான புரிதலைப் பயனர்களிடத்தில் ஏற்படுத்தல், முரண்பாடுகளைத் தோற்றுவித்தல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்டு உருவாக்கப்படுவதுடன் அவை சமூகத்தில் பாரிய விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. ஆனாலும் அனைத்து முக நூல் பயனர்களும் வெறுப்புப் பேச்சுக்களை விரும்பியிருக்கவில்லை, என்பதுடன் சில சமயங்களில் தனிநபர்களின் வாழ்வில் அவை பாரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. போன்ற முடிவுகள் ஆய்வாளரினால் கண்டறியப்பட்டன வடபுலத்தில் முகநூலைப் பயன் படுத்துபவர்கள் மத்தியில் அதிக வெறுப்புப்பேச்சுக்கள் தோற்றுவிக்கப்படுகின்றது அதிலும் அதிக கரிசனைக்கு ஆளாகும் விடயங்களிலே வெறுப்புப் பேச்சுக்கள் தோற்றுவிக்கப்படு கின்றது என்பதும் வெறுப்புப் பேச்சுக்கள் பல பின் விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதும் ஆய்வாளரினால் கண்டறியப்பட்ட ஆய்வின் முடிவாகும்.*

**திறவுச்சொற்கள்:** வடபுலம், முகநூல், வெறுப்புப் பேச்சுக்கள்,சமூக ஊடகங்கள், பிரஜைகள் ஊடகவியல்